**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 14.02.2018

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 மாசி மாதம் 02ஆம் நாள் **14.02.2018 புதன்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் ரூ:42.09 கோடி மதிப்பீட்டில் பாதளா சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பாதாள சாக்கடை திட்டப் பணி முடிவுற்று கீழ்கண்டவாறு கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் உந்து ஆய்வு தொட்டி நகராட்சியின் பராமரிப்பிற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண்: | அமைவிடம் | விபரம் |
|---|---|---|
| 1 | வார்டு எண்:02 பெருமாள் தெரு | கழிவுநீர் உந்து ஆய்வு தொட்டி |
| 2 | வார்டு எண்:24 அன்னபப்ராஜா மண்டபம் தெரு | கழிவுநீர் உந்து ஆய்வு தொட்டி |
| 3 | வார்டு எண்:28 பாரஸ்ட் ரோடு | கழிவுநீர் உந்து ஆய்வு தொட்டி |
| 4 | வார்டு எண்:33 கருவேல்நாயக்கன்பட்டி | கழிவுநீரேற்று நிலையம் |

மேற்கண்டவாறு பாதாள சாக்கடை திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கு தேவைப்படும் பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் கருதியும், மேலும் நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டும் தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள அரசின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான கீழ்கண்டவாறு உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| | |
|---|---|
| முதலாம் ஆண்டு | ரூ: 32.23 லட்சம் |
| இரண்டாம் ஆண்டு (5 சதவீத உயர்வு) | ரூ: 33.84 லட்சம் |
| மூன்றாம் ஆண்டு (5 சதவீத உயர்வு) | ரூ: 35.53 லட்சம் |

**அலுவலக குறிப்பு:-**

அ) பாதாள சாக்கடை திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை தனியார் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள அரசு அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) பாதாள சாக்கடைத் திட்ட பராமரிப்பிற்கான செலவினத்தை பாதாள சாக்கடை திட்ட மாதாந்திர சேவைக் கட்டணத்தில் ஈடுசெய்திடவும், மேலும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 410 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 02:

தேனி - அல்லிநகரம் நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்: 795 நாள்: 16-12-2013 தேனி – அல்லிநகரம் நகராட்சி கிழக்கு சந்தை மற்றும் மேற்கு சந்தையில் முன்பொது ஏலம் மூலம் முன்வைப்புத் தொகை பெற்று வணிக கடைகள் அமைத்திட தீர்மானிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 35199/P2/2014 நாள்: 17-12-2014-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், மதுரை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 5223/2015/B1 நாள்: 12-10-2015-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கீழ்கண்டவாறு பணிக வளாகம் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (தொகைரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சி கிழக்கு சந்தை பகுதியில் உள்ள காலியிடத்தில் தரை தளம் - 13 கடைகள் | ரூ. 50.00 |
| 2 | நகராட்சி மேற்கு சந்தை பகுதியில் வாரச் சந்தை நடைபெறும் பகுதி தவிர்த்து மீதமுள்ள காலியிடத்தில் 15 கடைகள். | ரூ. 50.00 |

தற்போது இரண்டாம் கட்டமாக கீழ்கண்டவாறு வணிக வளாகம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (தொகைரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி கிழக்கு சந்தையில் தற்போது உள்ள கடைகளுக்கு மேல் முதல் தளத்தில் - 13 கடைகள் | ரூ. 46.50 |

மேற்கண்டவாறு அமைக்கப்படவுள்ள வணிக கடைகளுக்கு முன்பொது ஏலம் கோரப்பட்டதில் குத்தகைக்கு போகாத கடைகளுக்கான வைப்புத் தொகையினை குறைத்து நிர்ணயம் செய்திட நகர்மன்ற தீர்மானம் எண்: 1620 நாள்: 20-06-2016-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ:146.50 லட்சத்திற்கு ரூ:145.00 லட்சம் முன்வைப்புத் தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்டவாறு நகராட்சி கிழக்கு சந்தை மற்றும் மேற்குச் சந்தையில் ரூ: 146.50 லட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு முன்பொது ஏலம் மூலம் வசூல் செய்யப்பட்ட வைப்புத் தொகை ரூ:145.00 லட்சம் தவிர்த்து மீதத் தொகை ரூ:1.50 லட்சத்தினை நகராட்சி வரி வருவாயினை பெருக்கிடும் வகையில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கான மீதத் தொகை ரூ:1.50 லட்சத்தினை நகராட்சி வரி வருவாயினை பெருக்கிடும் வகையில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 5638/ 2013 / இ1)

**<u>தீர்மான எண். 411 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 03</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான (கர்னல் ஜான் பென்னிகுவிக்) புதிய பேரூந்து நிலைய க.எண்.39ஐ குத்தகை உரிமம் திரு.R.ராஜேந்திரன் என்பவர்க்கு குத்தகை உரிமம் பெறப்பட்டு தொழில் தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலையின் காரணமாக நாள் 31.03.2017-ல் ஒப்படைப்பு க.எண்.39-ஐ திரும்ப நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட கடையின் (வரிவிதிப்பு எண்.2014052) குத்தகை கேட்பினை 01.04.2017 முதல் நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2965/2016/அ3)

**<u>தீர்மான எண். 412 1. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 04</u>:

இந்நகராட்சிக்கு மேற்கு சந்தையில் உள்ள கடை எண்.6 திரு.A.சத்திய மூர்த்தி என்பவரது பெயரில் உள்ளது. மேற்படி குத்தகைதாரர் குத்தகை இனத்தை தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலையில் திரு.B.தினேஷ் என்பவருக்கு மேற்படி குத்தகை இனத்தை ஒப்படைத்து விட்டு விலகி கொள்வதாக ஒப்பந்தம் செய்யப்பட்டதன்படி திரு.B.தினேஷ் என்பவர் மேற்படி கடையின் உரிமத்தினை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தருமாறு கோரிய பெயர் மாற்ற விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மேற்காணும் குத்தகை இனமான மேற்கு சந்தையில் உள்ள கடை எண்.6ஐ (வரிவிதிப்பு எண்.2005132) திரு. A.சத்திய மூர்த்தி என்பவர் பெயரிலிருந்து திரு.B.தினேஷ் என்பவரது பெயர்க்கு பெயர் மாற்றம் செய்திட அரசாணையின்படி பெயர்மாற்றக் கட்டணமாக ரூ.2,500/- விண்ணப்பக் கட்டணம் ரூ.500/- மற்றும் பெயர் மாற்றத்திற்க்கு வாடகை உரிமம் மாறுதல் பத்திரம் ஆகியவற்றை திரு.B.தினேஷ் என்பவர் சமர்ப்பித்துள்ளதால் அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 03.07.2007-ன்படி ஆணை (V)-ன்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அறிவிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றி தரலாம் என உத்தரவிடப்பட்டுள்ள அரசாணை மற்றும் குத்தகை நிபந்தனைக்குட்பட்ட இந்நகராட்சிக்கு சொந்தமான மேற்குச்சந்தை க.எண்.6ஐ திரு. A.சத்திய மூர்த்தி என்பவரது பெயரிலிருந்து திரு.B.தினேஷ் என்வபவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.312/2018/அ3)

**<u>தீர்மான எண். 413 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 05</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் (கர்னல் ஜான் பென்னிகுவிக்) பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் 07.02.2018-ம் தேதியில் நடைபெற்ற பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலம் கேள்வித்தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | S.நிரஞ்சனா, க/பெ.I.V.சரவணபிரேம், பழனிசெட்டிபட்டி, தேனி. | - | ரூ.19,00,000/- |
| 2. | வேல்மணி கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஆண்டிபட்டி. | - | ரூ.17,00,000/- |

<u>அலுவலகக்குறிப்பு</u> :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி S.நிரஞ்சனா என்பவர் தொகைரூ.19,00,000/-க்கு கோரியுள்ளார். உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 414 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 06</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடிக்கும் தொட்டி வசூல் செய்யும் குத்தகை உரிமம் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி நாள் 07.02.2018-ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலம் கேள்வித்தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | R.கோபி, க/பெ.P.M.ராசு, 326, கம்போஸ்ட் ஓடைத்தெரு, பயர் சர்வீஸ் பின், தேனி. | ரு.95,000/- | ரூ.60,000/- |

<u>அலுவலகக்குறிப்பு</u> :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒற்றை முறை ஒப்பந்தப்புள்ளி / ஒற்றை முறை ஏலம் கோரியுள்ளதால் மறு ஏலம் கோரியுள்ளார். கூடுதல் ஏலம் போக வாய்ப்பில்லை. மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 415 மறு ஏலம் அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து முனைய கட்டண கழிப்பறை (ஆண்கள் / பெண்கள்) குத்தகை உரிமம் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி நாள் 07.02.2018-ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலம் கேள்வித்தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | K.ராம்குமார், த/பெ.கருப்பத்தேவர், பண்ணைப்பட்டி, உசிலம்பட்டி, மதுரை. | ரு.2,80,000/- | ரூ.3,55,000/- |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒற்றை முறை ஒப்பந்தப்புள்ளி / ஒற்றை முறை ஏலம் கோரியுள்ளதால் மேற்படி தொகைகுறைவாக உள்ளதால் மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 416 மறு ஏலம் கோர அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 08</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.25-க்கு குத்தகை உரிமம் 07.02.2018-ம் தேதியில் நடைபெற்ற பொது ஏலத்துடன்கூடிய ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலம் கேள்வித்தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.V.பெரியகருப்பன், த/பெ.வெள்ளைசாமித்தேவர், கருவேல்நாயக்கன்பட்டி, மதுரை மெயின்ரோடு, தேனி. | ரு.7,200/- | ரூ.10,500/- |
| 2. | திரு.R.பார்த்தீபன், த/பெ.இராமகிருஷ்ணன், 184, சோலைமலை அய்யனார் கோவில் தெரு, தேனி. | ரு.6,000/- | -- |

<u>அலுவலகக்குறிப்பு</u> :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.V.பெரியகருப்பன் என்பவர் ரூ.10,500/-க்கு கோரியுள்ளார். உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையை ஏற்று குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 417 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 09</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான தேனி மகளிர் காவல் நிலையம் முன்பு உள்ள கட்டண கழிப்பறை வசூல் செய்யும் குத்தகை உரிமம் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி நாள் 07.02.2018-ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலம் கேள்வித்தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.K.சின்னத்தம்பி, த/பெ.O.கருப்பத்தேவர், தெற்கு ஜெகநாதபுரம், பழனிசெட்டிபட்டி, தேனி. | -- | ரூ.61,905/- |
| 2. | திரு.P.பொன்மணி, த/பெ.பரமன், குட்செட் தெரு, தேனி. | -- | ரூ.62,905/- |

<u>அலுவலகக்குறிப்பு</u> :

மேற்கண்ட குத்தகை இனம் 2017-2018-ம் ஆண்டு ரூ.60,905/-க்கு ஒப்பந்தப்புள்ளியை விட தற்போது P. பொன்மணி எ ன்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.62,905/- என கூடுதலாக கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 418 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 10</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேரூந்து முனைய சிறுநீர் கட்டண கழிப்பறை வசூல் செய்யும் குத்தகை உரிமம் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புங்ளளி நாள் 07.02.2018-ம் தேதியில் நடைபொற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மன்றத்தில் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலம் கேள்வித்தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.B.பழனிக்குமார், த/பெ ப.பாலசுப்ரமணி, 7-வது வார்டு, எம்.ஜி.ஆர்.நகர், கருக்கட்டான்பட்டி சாலை, உசிலம்பட்டி. | ரூ.1,83,000/- | ரூ.1,85,250/- |

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒற்றை முறை ஒப்பந்தப்புள்ளி / ஒற்றைமுறை ஏலம் கோரியதால் நகராட்சி வருமானம் எதிர்நோக்கி மேற்படி தொகை குறைவாக உள்ளதாலும் மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

<u>**தீர்மான எண். 419 மறும் ஏலம்கோர அனுமதிக்கப்பட்டது.**</u>

## <u>பொருள் 11</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான பங்களாமேடு மெயின் ரோடு ஆண்கள் கட்டண வசூல் செய்யும் குத்தகை உரிமம் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி 07.02.2018-ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி தொகை வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலம் கேள்வித்தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.V.பால்பாண்டி, தெற்குஜெகநாதபுரம், பழனிசெட்டிபட்டி, தேனி. | ரூ.51,000/- | ரூ.52,160/- |
| 2. | திரு.K.முருகன், உலகத்தேவர் தெரு, உத்தமபுரம், கம்பம். | ரூ.50,600/- | ரூ.48,100/- |

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :

மேற்கண்ட குத்தகை இனம் ஐந்தாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோர வெளியிட்ட அறிவிப்பில் இம்முறை கூடுதல் ஒப்பந்தப்புள்ளியாக ரூ.52,160/- என திரு.V.பால்பாண்டி என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளியினை நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் பொருட்டு குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

<u>**தீர்மான எண். 420 அனுமதிக்கப்பட்டது.**</u>

## பொருள் 12:

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சசந்தை நுழைவு கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி நாள் 07.02.2018-ம் தேதியில் நடை பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலம் கேள்வித்தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.B.சிலம்பரசன்,<br>க/பெ.பிள்ளையார் கோவில் தெரு,<br>கருநாக்கமுத்தன்பட்டி,<br>கம்பம் வழி, தேனி. | ரூ.18,05,000/- | ரூ.17,82,578/- |

**அலுவலகக்குறிப்பு** :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒற்றைமுறை ஒப்பந்தப்புள்ளி / ஒற்றை முறை ஏலம் கோரியுள்ளதால் மேற்படி தொகை குறைவாக உள்ளதாலும் நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 421 மறு ஏலம் கோர அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 13:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் (கர்னல்ா ஜான் பென்னிகுவிக்) உள்ள கடை எண்.3ஐ திரு.S.குமரேசன் என்பவர்க்கு மாத வாடகை ரூ.51,600/- என 05.03.2014 முதல் 31.03.2017 முடிய அனுபவித்து கொள்ள 3 ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கப்பட்டது. தற்போது 01.04.2017 முதல் 31.03.2020 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுபித்து வழங்க கோரி திரு.S.குமரேசன் என்பவர் அரசாணை எண்.92-ல் தெரிவித்துள்ளபடி, உரிமம் புதுப்பித்தல் விண்ணப்ப கட்டணம் ரூ.500/- செலுத்தியுள்ளார். மேற்கண்ட விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும்குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007-ன்படி வரிசை எண்.4 உட் பிரிவு III மற்றும் IVல் தெரிவித்துள்ளபடி மூன்று ஆண்டுகளை கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதன் பேரில், அக்குத்தகை தன்னியல்பாக புதுப்பிக்கப்படும் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை தொகையில் 15% உயர்த்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நாள் 31.03.2017 மாத வாடகை ரூ.51,600/-ல் 15% உயர்வு செய்து நாள் 01.04.2017 முதல் 31.03.2020 முடிய உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 422 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் 14</u>:**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் உள்ள **33** வார்டு பகுதிகளில் முதல் நிலை குப்பை சேகரித்தல், தரம் பிரித்து, குப்பை சேகரிக்கும் கூடத்தில் சேர்க்கவும், திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் அனைத்து சுகாதாரப் பணிகளையும் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் காலிப்பணியிடங்களுக்கு ஏற்றவாறு பணியாளர்களைப் பெற்று துப்புரவு பணி செய்வதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 4604 / P3 / 2018, நாள். 15.02.2018–ன் படி 100 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த விதிகளின் படி பெற்று பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் பணியினை **3** ஆண்டு காலம் அல்லது காலிப்பணியிங்கள் நிரப்படும் வரையில் எது முன்னதாகவோ அமைகிறதோ அது வரையிலும் தனியார் மூலம் பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 4604 / P3 / 2018, நாள். 15.02.2018–ன் படி 100 தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு மிகாமல் ஒப்பந்த விதிகளின் படி பணியாளர் ஒருவர் வீதம் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் கடித ந.க.எண். 8977 / 2016 / இ**2**, நாள்.16.05.2017–ன்படி, 2017-2018-ம் நிதியாண்டிற்கு உயர்த்தியமைக்கப்பட்ட தினக்கூலி நிர்ணய செய்யப்பட்ட தொகையுடன் ESI, EPF, Life Insurance, Service tax. Uniforms and safety equipments ஆகியவற்றை சேர்த்து மேற்படி பணிக்கு **1** ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.152.00 இலட்சத்துக்கு ( ரூபாய் ஒருகோடி ஐம்பத்து இரண்டு இலட்சம் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரத்திற்கான செலவினத்திற்கும் மனறம் அனுமதிக்கலாம்
4. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**617/2018**/எச்**1**)

**<u>தீர்மான எண். 423 1, 2,3 மற்றும் 4.அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 15</u>:

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித நாள்.13590 / 09 / ஜே3 நாள்.13.12.2010—ன் படி இந்நகராட்சியில் உள்ள 10 ஓட்டுநர்களுக்கு நபர் 1—க்கு 1 செட் ஷூ வாங்கி தருவதற்கு விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட 3 நிறுவனங்களிடமிருந்து 05.02.2018—ம் தேதியில் விலைப்புள்ளி வரப்பெற்று உள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளி தொகையினை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | வசந்தம் எண்டர்பிரைசஸ், 480, ஏ, ஆறுமுகம் டவர்ஸ்,<br>பெரியகுளம் ரோடு, தேனி. | 1 | 1350 |
| 2 | சீமாட்டி புட்வேர்ஸ்,91 / பி, நவமணி காம்ப்ளக்ஸ்,<br>பகவதியம்மன் கோவில் தெரு, தேனி | 1 | 1409 |
| 3 | பரக்கத் ஷூ மார்ட்,<br>5, பள்ளி வாசல் தெரு, கம்பம் ரோடு, பூதிப்புரம் மினிபஸ் ஸ்டாப் அருகில், தேனி | 1 | 1400 |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்படி விநியோகம் செய்யப்படும் ஷூ—க்களுக்கான உத்தேச செலவினத் தொகைதொகை ரூ. 13500—ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவரின் முன்அனுமதி பெற்று வரிசை1—ல் குறிப்பிட்டுள்ள வசந்தம் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் குறைவாக விலைப்புள்ளி கோரிய தொகையினை ஏற்று அந்நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்காலம்.
(ந.க.எண்.3589/2016/எச்1)

**<u>தீர்மான எண். 424 1, 2, மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 16</u>:

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் மின் கம்பியாளராக பணியாற்றும் திரு.J.W.செல்வக்குமார் என்பவர் புதியதாக இரண்டு சக்கர வாகனம் வாங்குவதற்கு முன்பணம் ரூ.50,000/- வழங்கக் கோரியுள்ளார். அன்னாரது விண்ணப்பம் பரிசீலினை செய்ததில் அரசாணை எண்.467 நிதி (சம்பளம்) துறை நாள் 22.09.2009-ன்படி இரண்டு சக்கர வாகனம் முன் பணம் ரூ.50,000/- பெற தகுதியுடைவராக உள்ளார். எனவே அன்னாருக்கு இரு சக்கர வாகன முன்பணம் ரூ.50,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட தொகை ரூ.50,000/-ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4241/2017/பி2)

**<u>தீர்மான எண். 425 1, 2.அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 17</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி 2017-18-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:7.50 லட்சம் (ரூபாய்: ஏழு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்: 12 வள்ளி நகரில் புதிததாக சமுதாய கழிப்பிடம் அமைத்திட நகர்மன்ற தீர்மானம் எண்: 361 நாள்: 14-12-2017-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 05-01-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.அப்துல் ரஹீம் | ரூ: 6,38,160.17 | 0.37% குறைவு |
| 2 | திரு.M.முகமது சலீம் | ரூ: 6,91,350.60 | 7.92% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு. K.அப்துல் ரஹீம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 4143 / 2017 / இ1)

**<u>தீர்மான எண். 426 அ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 18</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தையில் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாகத்தில் உள்ள 13 கடைகளுக்கு மின்வசதி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:2.50 லட்சம் (ரூபாய்: இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தையில் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாகத்தில் உள்ள 13 கடைகளுக்கு மின்வசதி மேற்கொள்ளுதல் | 2.50 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்: / 2018 / இ1)

**<u>தீர்மான எண். 427 அ, ஆ மற்றும் இ.அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 19</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி 2017-18-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:9.90 லட்சம் (ரூபாய்: ஒன்பது லட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி - அல்லிநகரம் நகராட்சி அல்லிகரம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் “Smart Class” அமைக்கும் பொருட்டு False Ceiling, Painting, Light arrangements மற்றும் Furnitures ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல் அமைத்திட நகர்மன்ற தீர்மானம் எண்: 393 நாள்: 12-01-2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 19-01-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஓப்பந்ததாரர் பெயர் | ஓப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ருபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | JMD Solution, மதுரை | ரூ: 8,38,425.00 | 0.42% குறைவு |
| 2 | Treasure Envision, மதுரை | ரூ: 8,35,640.00 | 0.76% குறைவு |

<u>அலுவலக குறிப்பு :-</u>

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள Treasure Envision, மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மாணவர்கள் நலன் கருதி உடனடியாக பணி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்: 4256 / 2017 / இ1)

**<u>தீர்மான எண். 428 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 20</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி 2017-18-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:4.60 லட்சம் (ரூபாய்: நான்கு லட்சத்து அறுபது ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில தேனி -

அல்லிநகரம் நகராட்சி அல்லிகரம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் "Smart Class" அமைத்திட நகர்மன்ற தீர்மானம் எண்: 394 நாள்: 12-01-2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 19-01-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | JMD Solution, மதுரை | ரூ: 3,67,300.00 | 2.59% குறைவு |
| 2 | Treasure Envision, மதுரை | ரூ: 3,66,930.00 | 2.69% குறைவு |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள Treasure Envision, மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மாணவர்கள் நலன் கருதி உடனடியாக பணி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 429 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 21:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்திடும் பொருட்டு உப்பார்பட்டியில் அமைந்துள்ள நகராட்சி குப்பை கிடங்கில் பைப்லயன், தரைமட்ட தொட்டி, கழிவுநீர் தொட்டி, இயற்கை உரம் தயாரிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் இயந்திரங்கள் கூடத்தில் சிமெண்ட் தளம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையானதாக உள்ளது. எனவே குப்பை கிடங்கின் உட்புறம் பைப்லயன், தரைமட்ட தொட்டி, கழிவுநீர் தொட்டி, இயற்கை உரம் தயாரிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் இயந்திரங்கள் கூடத்தில் சிமெண்ட் தளம் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:9.50 லட்சம் (ரூபாய்: ஒன்பது லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி உப்பார்பட்டி குப்பை கிடங்கில் பைப்லயன், தரைமட்ட தொட்டி, கழிவுநீர் தொட்டி, இயற்கை உரம் தயாரிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் இயந்திரங்கள் கூடத்தில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 9.50 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: /2018/ இ1)

**தீர்மான எண். 430 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 22:

2016-17-ம் ஆண்டு முதல் தேனி – அல்லிநகரம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் விபரம் மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி அவர்களின் கடிதம் ந.க.எண்: 169/செ.ம.தொ.அ/2017 நாள்:30-09-2017-ன்படி தமிழ்சுடர் நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | தொகை |
|---|---|---|
| 1 | தமிழ்சுடர், மதுரை | ரூ: 9,030/- |
| | **மொத்தம்** | **ரூ: 9,030/-** |

மேற்கண்ட தொகை ரூ:9,030/- (ரூபாய்: ஒன்பது ஆயிரத்து முப்பது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:463 /2017/ இ1)

**தீர்மான எண். 431 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 23:

2017-18-ம் ஆண்டு 14வது நிதிக்குழு மானியத்தில் அனுமதிக்கப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளிழல்களில் மாவட்ட அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினபூமி | செய்தி மக்கள் தொடர்பு துறை, தேனி. வெளியீட்டு ஆணை எண்: 785/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2016 நாள்: 24-11-2017. | ரூ: 17,766/- |
| | | **மொத்தம்** | **ரூ: 17,766/-** |

மேற்கண்ட தொகை ரூ:17,766/- (ரூபாய்: பதினெழு ஆயிரத்து எழுனூற்று அறுபத்து ஆறு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 463 /2017/ இ1)

**தீர்மான எண். 432 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 24:

தேனி – அல்லிநகரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பாரஸ்ட ரோடு வால்கரடு வனப்பகுதியில் 90 மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடை கழிவுநீர் பிரதான குழாய்கள் அமைத்திட அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ள Deputy Conservator of Forest (Central), சென்னை அவர்களின் 03-11-2017 தேதிய கடிதம் F.No.4-TNB007/2016-CHN/1780 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்: 5754 /2001/ இ1)

**தீர்மான எண். 433 அ. பதிவு செய்யப்பட்டது.**

## பொருள் 25:

உப்பார்பட்டியில் அமைந்துள்ள நகராட்சி குப்பை கிடங்கில் உட்புறம் இயந்திரங்களுக்கான கூடத்தில் லாரியின் மூலம் குப்பை கொட்டுவதற்கு உரிய சாய்வுதளம் அமைக்க வேண்டியது இன்றியமையானதாக உள்ளது. எனவே குப்பை கிடங்கின் உட்புறம் சாய்வுதளம் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:4.50 லட்சம் (ரூபாய்: நான்கு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி உப்பார்பட்டி குப்பை கிடங்கில் இயந்திரங்களுக்கான கூடத்தில் சாய்வுதளம் அமைத்தல் | 4.50 |

**அலுவலக குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 120 /2018/ இ1)

**தீர்மான எண். 434 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 26</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி திரு.ராஜா மற்றும் 9 (ஒன்பது) நபர்களால் (அயன் சர்வே எண்கள்.1550/1, 2, 3 பகுதிகள், 1551 பகுதி 15/52/1 2 ) நகரளவை வார்டு - B, பிளாக் - 5, நகரளவை எண்.11/2, 3A, 4B, 4D -ல் உள்ள 3.47 ஏக்கர் இடத்தினை 64 எண்ணம் மனைகளாக பிரித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மூலம் ம.வ/ நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (மம) எண்.05/2018 நாள் 09.03.2018-ல் மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தன் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

அ. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் மனைப்பிரிவிற்கு தொழிற்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது. மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ. மேற்படி மனைப்பிரிவில் அமையும் பொது ஒதுக்கீடு மனைப்பிரிவில் மின் கம்பம் அமைக்க மதிப்பீடு தயார் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 435 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 27</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் இயங்கி வரும் மின் தூக்கி (Johnson Lift) அங்கீகாரம் பெற்ற Johnsoon Lifts Pvt. Ltd., மதுரை நிறுனத்தின் மூலம் 01-02-2016 முதல் ஓராண்டிற்கு ஆண்டு பராமரிப்பில் உள்ளது. மேற்கண்ட ஆண்டு பராமரிப்பு 31-01-2016 உடன் முடிவடைகிறது. எனவே மின் தூக்கியினை பழுது இல்லாமல் உரிய முறையில் பராமரிப்பு செய்து இயக்கும் பொருட்டு 01-02-2016 முதல் ஓராண்டிற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணயினை அங்கீகாரம் பெற்ற Johnsoon Lifts Pvt. Ltd., மதுரை நிறுனம் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ: 1.00 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சம் மட்டும்) மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் இயங்கி வரும் மின் தூக்கியினை ஓராண்டு காலத்திற்கு பழுத மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல் | 1.00 |

<u>அலுவலக குறிப்பு :-</u>

1) அலுவலக மின் தூக்கியினை அங்கீகாரம் பெற்ற Johnsoon Lifts Pvt. Ltd., மதுரை நிறுனம் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்: /2017/ இ1)

**<u>தீர்மான எண். 436 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 28</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து நிலையம் அருகில் உள்ள வாடகை கார் நிறுத்துமிடம் பள்ளமாக உள்ளதால் மழை காலங்களில் சாக்கடை கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழல் ஏற்படுகிறது. எனவே பொது மக்கள் நலன் கருதி பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு பக்க சுவர்கள் அமைத்து சாலை மட்டத்திற்கு உயரப்படுத்திட பேவர் பிளாக் பதித்தல் இன்றியமையானதாக உள்ளது. எனவே காமராஜர் பேருந்து முனையம் அருகில் உள்ள வாடகை கார் நிறுத்துமிடத்தில் பேவர் பிளாக் பதித்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:9.80 லட்சம் (ரூபாய்: ஒன்பது லட்சத்து என்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையம் அருகில் உள்ள வாடகை கார் நிறுத்துமிடத்தில் பேவர் பிளாக் பதித்தல் | 9.80 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 437 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 29</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி 2017-18-ம் ஆண்டு மூலதண நிதியின் கீழ் ரூ:250.76 லட்சம் மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சியில் துப்புரவு பணியாளர் குடியிருப்பு அமைக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்:297 நாள்: 06-10-2017 நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 12-01-2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் உறை திறக்கப்பட்டது. வரப்பெற்ற

ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியுடைய ஒப்பந்ததாரரின் விலைவிகத உறை 17-01-2018 அன்று திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண். | ஓப்பந்ததாரர் பெயர் | ஓப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | C.நல்லகுரும்பன் அன் கோ | ரூ: 2,77,24,657.50 | 10.70% கூடுதல் |
| 2 | P.சிவசாமி | ரூ: 2,65,04,323.13 | 5.83% கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகதம் கோரியுள்ள திரு. P.சிவசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி அலுவலக மதிப்பீட்டை விட 5.83 சதவீதம் கூடுதலாக உள்ளதால், விலைவிகிதத்தினை குறைத்துதர கோரியதில், அலுவலக மதிப்பீட்டினை விட 4.95 சதவீதம் கூடுதலான விலை விகித்தில் குறைத்து கொடுத்துள்ளார், மேலும் தற்போதுள்ள விலைவாசி மற்றும் கூலி உயர்வினாலும் இதற்கு மேல் தன்னால் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

தற்போது நகராட்சி துப்புரவு பணியாளர் நலன் கருதி துப்புரவு பணியாளர் குடியிருப்பினை விரைந்து அமைத்திடும் பொருட்டும், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன் படி அலுவலக மதிப்பீட்டினை விட 4.95 சதவீதம் கூடுதலான விலைவிகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு அனுப்ப உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி குழு பரிந்துரை செய்துள்ளது.

## <u>அலுவலக குறிப்பு</u> :-

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்பதபுள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.P.சிவசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததாரரின் அலுவலக மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான விலைவிகதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன் படி நகர்மன்றத்தின் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், தற்போது நகராட்சி துப்புரவு பணியாளர் நலன் கருதி துப்புரவு பணியாளர் குடியிருப்பினை விரைந்து அமைத்திடும் பொருட்டும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான பூர்வாங்க மதிப்பீட்டில் தேவைப்படும் இதர பணிகள் மேற்கொள்ள இதர இனங்களுக்கான தொகை (Lumpsum amount) அனுமதிக்கப்பட்டுள்ள தொகையில் தேவைப்படும் கூடுதல் இனங்களை அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மிகாமல் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:2781/2017/ இ1)

**தீர்மான எண். 438 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 30:

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் காவல் பணிக்கு முன்னாள் படைவீரர் நல வாரியம் (TEXCO) பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு தினசரி 3 பணியாளர்கள் Shift அடிப்படையில் பணியில் உள்ளனர். மேற்கண்ட பணிக்கான ஓராண்டு உத்தரவு ஜனவரி-2018 மாதத்துடன் முடிவடைகிறது. எனவே நகராட்சி அலுவலக கட்டடத்தில் காவல் பணிக்கு தற்போது நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டு பிப்ரவரி – 2018 முதல் மேலும் ஓராண்டுக்கு முன்னாள் படைவீரர் நல வாரியம் (TEXCO) பணியாளர்கள் நியமனம் செய்திடவும், TEXCO நிறுவனத்தின் Lr.No.TEXCO/8157/Revised VDA 2017/ நாள்:27-04-2017-ன் படி காவல் பணிக்கு பணியாளர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு (நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம்) ரூ:15,761/- வீதம் ஊதியம் வழங்கிடவும், மேலும் ஓராண்டிற்கான உத்தேச மதிப்பீடு ரூ:7.50 லட்சம் ரூபாய: (ஏழு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) நகராட்சி அலுவலக காவல் பணியினை பிப்ரவரி-2018 முதல் ஓராண்டிற்கு முன்னாள் படைவீரர் நல வாரியம் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) ஓராண்டிற்கான உத்தேச செலவினம் ரூ:7.50 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 925/2018/ இ1)

**தீர்மான எண். 439 அ, ஆ, இ மற்றும் ஈ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 31:

தேனி – அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்த முனையத்தில் அம்மா உணவகம் அமைக்கப்பட்டு கடந்த 24-05-2015 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட அம்மா உணவக செயல்பாட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை அரசாணை (நிலை) எண்:79 நாள்: 31-05-2013 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை அரசாணை (நிலை) எண்:118 நாள்: 26-06-2014-ன் படி கீழ்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| அ) | பணியாளர் ஊதியம் | 12 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய்:250/- வீதம். |
| ஆ) | அரிசி | ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் வாங்கலாம். |
| இ) | பால் மற்றும் தயிர் | ஆவின் நிறுவனம் மூலம் வாங்கலாம். |
| ஈ) | சமையல் எரிவாயு | அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் மூலம் வாங்கலாம். |
| உ) | காய்கறி | உள்ளூர் சந்தை விலைக்கு ஏற்ப உழவர் சந்தையில் நாள் ஒன்றுக்கு ரூபாய்: 1,000/- மிகாமல் வாங்கலாம். |
| ஊ) | பலசரக்கு | உள்ளூர் சந்தை விலைக்கு ஏற்ப கூட்டுறவு பண்டக சாலையில் வாங்கலாம். |
| எ) | உணவுப்பொருட்கள் (இட்லி, சாம்பார் சாதம், தயிர் சாதம்) விலை ரசீது | கூட்டுவறவு அச்சகங்களில் அச்சடிக்கலாம். |
| ஏ) | இதர செலவினங்கள் | உள்ளூர் சந்தை விலைக்கு ஏற்ப வாங்கலாம். |

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் அம்மா உணவக செயல்பாட்டிற்கு மேற்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளவும், மேலும் 2018-19 ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ:35.00 லட்சத்திற்கு (ரூபாய்: முப்பத்து ஐந்து லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :-

அ) அரசாணையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) மேற்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) அம்மா உணவகத்திலிருந்து பெறப்படும் வருவாய்க்கு, அதிகமாக மேற்கொள்ள வேண்டிய செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 440 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி